சி.சி.எண். 550/2023. நாள் 10.06.2024

சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு, எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –

அசா.3.சிவக்குமார் , த/பெ. வெள்ளைத்துரை

( எதிரி ஆஜர் )

1. நான் மடவார் வளாகத்தில் குடியிருந்து வருகிறேன். நான் ஆட்டோ ஓட்டுனராக வேலை செய்து வருகிறேன். எனது ஆட்டோ ஸ்டான்ட் மடவார் வளாக கோவில் வாசலில் அமைந்துள்ளது. அ.சா.1 கீதாலட்சுமி, அ.சா.2 ஹரிஸ்தா ஆகியோர்களை எனக்கு நன்கு தெரியும். 11.05.2021 ம் தேதி அ.சா.2 ன் செயின் அறுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது, மறுநாள் தான் எனக்கு தெரியும். மறுநாள் அ.சா.1, 2 உடன் நான் காவல் நிலையத்திற்கு சென்றேனா என்றால் இல்லை.

2. சம்பவ இடம் பற்றியும், என்ன பொருள் அறுத்துச்செல்லப்பட்டது என்ற விவரமும் எனக்கு தெரியாது. 12.05.2021 ம் தேதி திருபாற்கடல் அருகே என்னை போலீசார் விசாரித்தார்கள். போலீசார் விசாரணையில் எதிரி அணிந்திருந்த சட்டையின் நிறம், கிழிந்திருந்ததா என்ற விவரத்தை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எதிரியின் சட்டை கிழியாமல் இருந்தது. போலீசார் VRS ரைஸ் மில் அருகே சசிதரன் ஹோட்டல் முன்புறத்தில் எதிரி எடுத்து ஆஜர் செய்ததை போலீசார் கைப்பற்றினார்கள்.

3. வாக்குமூலத்தை எழுதி திருப்பாற்கடல் அருகே என்னிடம் போலீசார் கையெழுத்து வாங்கிக்கொண்டார்கள். எனது முன்னிலையில் விசாரித்ததாக குறிப்பு எழுதி என்னிடம் கையெழுத்து வாங்கிக்கொண்டார்கள். நான் கையெழுத்து செய்த பேப்பரில் உள்ள முழு விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். மணிகண்டபிரபு எனது ஸ்டான்டில் தான் ஆட்டோ ஓட்டி வருகிறார். அ.சா.1 னின் மகளான அ.சா.2 ஐ மணிகண்டபிரபு ஆட்டோவில் பள்ளிக்கு அழைத்துச் செல்வார் என்றால் சரிதான்.

4. VRS ரைஸ்மில் அருகே என்னை விசாரித்ததை தவிர மறுமுறை

போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் ஒரு முறை காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். என்னிடம் காவல் நிலையத்தில் வைத்து போலீசார் கையெழுத்து வாங்கிக்கொண்டார்கள் என்றும், VRS ரைஸ்மில் அருகே என்னிடம் கையெழுத்து வாங்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. அ.சா.1 கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5. எதிரியை தற்போதுதான் நீதிமன்றத்தில் வைத்து பார்க்கிறேன் என்றும், இதற்கு முன்பு எதிரியை பார்த்ததில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கு சம்பவத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.